# உக்ரைன்-ரஷ்சியா யுத்தம் ஐரோப்பாவில் ஏற்படுத்திய அரசியல்-பொருளாதாரத் தாக்கங்கள்

**சஜந்தன், ச., கணேசலிங்கன், கே.ரீ.**
அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
sajanthan96@gmail.com

*போர் உலகலாவிய ரீதியில் தவிர்க்க முடியாத விடயமாகும். நாடுகளுக்குள்ளும், நாடுகளுக்கிடையிலும் பல காரணங்களை அடிப்படையாகக்கொண்டு போர் நிகழ்ந்து வருகிறது. புவிசார் அரசியலை அடிப்படையாகக்கொண்டு முரண்படுதல், நாடுகளின் இறை யாண்மையில் தலையிடுவதால் முரண்படுதல், அரசியலமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு முரண்டுதல் என பல்வேறு காரணங்களை அடிப்படையாக் கொண்டு நாடுகளுக் கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனடிப்படையிலேயே 2022இல் உக்ரைனுக்கும்-ரஷ்சியாவுக்கும் இடையில் போர் ஏற்பட்டுள்ளது. உக்ரைன் நேட்டோவுடன் ஒன்றிணைவது ரஷ்சியாவின் அரசியல் இருப்புக்கு ஆபத்து ஏற்படும் என்பதை தவிர்பதற்காகவே ரஷ்சியா உக்ரைன் மீது போரை மேற்கொண்டுள்ளது. இதனை ஒரு புவிசார் அரசியலுக்கான போராகவே பார்க்கப்படுகிறது. புவிசார் அரசியலை அடிப் படையாக்கொண்டு போர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உக்ரைன் மேற்குலகத்தின் கைப்பொம்மையாகவே பார்க்கப்படுகின்றது. உக்ரைன் பிரச்சினை வெறுமனே அரசியலோடு தொடர்புடையது என்றாலும் அதற்கான அடிப்படை புவியியற் பின்னணியிலேயே தங்கியுள்ளது. கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்சியாவை ஒட்டியமைந்துள்ள தேசம் உக்ரைன் என்பது அதன் புவிசார் அரசியலாகும். ரஷ்சிய ஆளும் வர்க்கத்திற்கு பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் உக்ரைன் வளமான நாடாக பார்க்கப்படுகிறது. உக்ரைன் எல்லைகளின் அமைவிடம், வளங்கள், சூழல் போன்ற புவிசார் விடயங்கள் அரசியல் பிரச்சினைக்கான காரணிகளாக அமைந்துள்ளன. உலகளாவிய ரீதியில் இப் போர் அதிக நெருக்கடிளை ஏற்படுத்தியுள்ளது. அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளாக ஐரோப்பிய நாடுகள் காணப்படுகின்றது. ஐரோப்பா பொருட்களின் இறக்குமதிகளுக்காக அதிகம் உக்ரைன்-ரஷ்சியாவிலேயே தங்கியுள்ளன. ஐரோப்பா மற்றும் அமெரிக்கா உட்பட நேட்டோ நாடுகள் ரஷ்சியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தன. எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட பொருட்களை ரஷ்யாவிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியாத சூழல் போரினால் ஐரோப்பாவுக்கு ஏற்பட்டுள்ளது. தானியப் பொருட்களுக்காக ஐரோப்பா உக்ரைனை சார்ந்துள்ளது. தொடர்ச்சியான போரினால் ஐரோப்பாவுக்கான உணவுத் தேவையினையும் ரஷ்சியாவின் ஐரோப்பாவுக்கான பொருளாதார தடையாக மாறியது. இதனால் இந்த போர் ஐரோப்பாவிற்கு எதிரானதாகவும், ஐரோப்பாவை அரசியல் பொருளாதார, நெருக்கடிக்கு உற்படுத்தியதாகவும் மாற்றியுள்ளது.*

**திறவுச்சொற்கள்:** புவிசார் அரசியல், அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, ரஷ்சிய-உக்ரைன் போர்.